**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT**
**CHENGALPATTU**

**MCOP No. 47/2019**
**&**
**MCOP No. 48/2019**

| | |
|---|---|
| Ranking of Witness | : RW. 2 |
| Name | :.திருமதி. விஜயலட்சுமி |
| Father's Name | : திரு. முனுசாமி |
| Age | : 52 |
| Address | : செங்கல்பட் |

Dated :07.10.2025

(சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்)

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

**1,2 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரர் எங்களது காப்பீடு நிறுவனத்தில் தான் வாகனத்திற்கு காப்பீடு பெற்றிருந்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் ஓட்டுநர் உரிமம் முன்னிலைப்படுத்தவில்லை என்பதாக குறிப்பிட்டுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆய்வின் போது ஓட்டுநர் உரிமம் முன்னிலைப்படுத்தவில்லை என்பதற்காக அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என கூறமுடியாது என்று சொன்னால் சரியல்ல. எங்கள் நிறுவனத்திற்காக விசாரணைச் செய்து எங்கள் நிறுவனத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு எங்கள்

7/10/25 7/10/25

நிறுவனம் தான் விபத்து இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. அந்த வண்டியுடன் மற்றோரு வண்டி மோதி விபத்து ஏற்பட்டது அந்த வாகனத்திற்கு காப்பீடு உள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அந்த வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்று எனக்கு தெரியாது. அந்த வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அது என்னிடம் உள்ளது. விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு எங்கள் நிறுவனம் தான் விபத்து இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்த இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் நிறுவனத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

07/10/25

<u>**மறுவிசாரணை – இல்லை**</u>

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 07.10.2025 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

7/10/25

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.